# 'பிரச்னைக்குரிய வழக்குகளைத் தீர்ப்பதில் சட்டம் பயிலும் மாணவர்கள் சிறந்து விளங்க வேண்டும்'

**பெங்களூரு, பிப். 8:** பிரச்னைக்குரிய வழக்குகளைத் தீர்ப்பதில் சட்டம் பயிலும் மாணவர்கள் சிறந்து விளங்க வேண்டும் என கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி சங்கர் கணபதி பண்டிட் தெரிவித்தார்.

பெங்களூரு சிஎம்ஆர் பல்கலைக்கழகத்தில் திங்கள்கிழமை பிரச்னைக்குரிய வழக்குகளைத் தீர்ப்பதற்கான மாற்று மையத் தொடக்க விழா நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு அவர் பேசியதாவது:

சட்டம் பயிலும் மாணவர்கள் சிலர் பிரச்னைக்குரிய வழக்குகளைத் தீர்க்க முடியாமல் திணறுவதை காணமுடிகிறது. பிரச்னைக்குரிய வழக்குகளைத் தீர்ப்பதில் சட்டம் பயிலும் மாணவர்கள் சிறந்து விளங்க வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு, பிரச்னைக்குரிய வழக்குகளைத் தீர்ப்பதற்கான மாற்று மையம் சிஎம்ஆர் பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்டுள்ளது வரவேற்புக்குரியது.

சட்டம் பயிலும் மாணவர்கள் காலத்துக்கேற்ற வகையில், சட்டங்களை பயில்வதில் ஆர்வமாக இருக்க வேண்டும். நல்ல முறையில் சட்டங்களைப் பயின்று, எதிர்காலத்தில் சிறந்த முறையில் வழக்குரைஞர்களாகி நாட்டுக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்றார். நிகழ்ச்சியில், உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி ஆர்.பி.பூதியால், உயர்நீதிமன்ற வழக்குரைஞர் சுசீலா சாரதி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.